அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.- 226

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7

1983, ஒக்டோபர் 5 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகிய யாவர்க்கும்.

உத்தியோகத்தர்களின்/பணியாளர்களின்
<u>பிறந்த திகதிகளை உறுதிப்படுத்தல்.</u>

அமைச்சு, திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணி புரியும் உத்தியோகத்தர்/பணியாளர் ஒருவரின் பிறந்த திகதியை எக்காரணம் பொருட்டாவது உறுதிப்படுத்திக் கொள்ளுமிடத்துப் பதிவாளர் அதிபதி அல்லது அவரால் முறைப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் வழங்கியுள்ள பிறப்புச் சான்றிதழன்றி அல்லது 1959.03.05 திகதியும் 482 ஆம் இலக்கமும் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கையின் 2ஆம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள வயது பற்றிய சிறப்புச் சான்றிதழன்றி வேறெந்த ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படல் ஆகாது.

02. பிறப்புச் சான்றிதழொன்றின் அல்லது நேர்தகவு வயதுச் சான்றிதழொன்றின் உண்மைப்பாடு பற்றி ஐயுறுமிடத்து அவ்விடயம் செவ்வைப் பார்த்தல் பொருட்டு அச்சான்றிதழை வழங்கிய அதிகாரியிடம் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

03. பிறப்புச் சான்றிதழின் மூலம் அல்லது நேர்தகவு வயதுச் சான்றிதழின் மூலம் அல்லாது ஏனைய ஆவணத்தின் மூலம் உத்தியோகத்தர்/பணியாளர் ஒருவரது வயது ஏலவே உறுதிப்படுத்தப் பெற்றிருக்குமாயின் அந்த உத்தியோகத்தரது / பணியாளரது பிறப்புச்சான்றிதழை அல்லது நேர்தகவு வயதுச் சான்றிதழை மீண்டும் வரவழைத்து முன்பு தீர்மானிக்கப்பட்ட வயது சரியா, பிழையா என்பது ஆய்ந்தறிதல் வேண்டும்.

04. அங்ஙனமாயினும், ஓய்வூதியப் பங்கொடைக் கொடுப்பனவுகள் தாமதமின்றி இடம்பெறும் பொருட்டு வெளியிடப்பெற்றுள்ள ஓ.ஊ. 1394 (11 தொகுதி) இலக்கமும் 1966.06.26ஆந் திகதியும் கொண்ட சுற்று நிருபத்தின் 2 ஆம் பந்தியில் உள்ள சிறப்பு ஏற்பாடுகள் இல்லாதொழிக்கப்படமாட்டா.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.